ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2051/42 - 2017 දෙසැම්බර් 29 වැනි සිකුරාදා - 2017.12.29
*2051/42 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1995 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்**

*பிரிவு 4 (2) இன் கீழான பிரசுரிப்பு*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதனகத்துப்பின்னர் 'நிறுவகம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள 'இடைக்கால நிதிக்கூற்றுக்களில் உள்ள பெறுமதிகளுக்கான மாற்றுக் கையாள்கைக் கூற்றினை' 01 சனவரி 2018 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளது. இந்த மாற்றுக் கையாள்கைக்கான கூற்று இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் முதலாவது நாளில்அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளை உள்ளடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு நடைமுறைக்கு வரும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

பேரவையின் கட்டளைப்படி,

*அருண அல்விஸ்,*
*செயலாளர்.*

*இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்,*
*இல: 30 A,*
*மலலசேகர மாவத்தை,*
*கொழும்பு 07.*
*2017, திசெம்பர் 29 ஆந் திகதி*

## இடைக்கால நிதிக்கூற்றுக்களிலுள்ள பெறுமதிகளுக்கான மாற்றுக் கையாள்கைக் கூற்று

### முன்னுரை

*இலங்கைக் கணக்கீட்டு நியமம் LKAS 34 இடைக்கால நிதி அறிக்கையிடலானது, ஒரு உரிமம் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இடைக்கால நிதி அறிக்கைகளைத் தயாரிக்க தேவைப்படுத்தப்பட்டிருப்பின் அல்லது தயாரிக்கத் தேர்வு செய்திருப்பின், பிரயோகிக்கத் தக்கதாகும். LKAS 34 நியமத்தின் பந்தி 34 இன் படியாக, இடைக்கால நிதிக்கூற்று ஒன்று SLFRS நியமங்களின் அனைத்துத் தேவைப்பாடுகளுடனும் இணங்காதவிடத்து, அது SLFRS நியமங்களுக்கு இணக்கமானது எனக் குறிப்பிடப்படுதல் ஆகாது.*

*இலங்கைக் கணக்கீட்டு நியமம் SLFRS 9 நிதிச் சாதனங்கள் 01 சனவரி 2018 அன்று அல்லது அதற்குப் பின் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலப் பகுதிகளுக்கு நடைமுறையில் இருக்கும். அதன் படியாக, இடைக்காலப் பெறுபேறுகளை அறிக்கையிடுதலில், உரிமங்கள் SLFRS 9 நியமத்தினைப் பயன் படுத்துவதுடன் அதற்கு இணங்கி நடத்தல் வேண்டும். எனினும், SLFRS 9 நியமத்தின் பந்தி 7.2.16 ஆனது, நடைமுறைக்கு சாத்தியம் இல்லாதவிடத்து, முதன்முறைக் கடைப்பிடித்தல் திகதிக்கு முற்பட்ட காலங்களிலான இடைக்காலங்களுக்கு இந்த நியமத்தைப் பிரயோகிக்கத் தேவையில்லை என அனுமதிக்கிறது.*

*SLFRS 9 நியமத்தின் கிரமமான நடைமுறைப்படுத்தலுக்கான மேலதிக கால அவகாசத்தினை வழங்கும் வகையில், 01 சனவரி 2018 க்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிதி ஆண்டுக் காலப் பகுதிகளுக்கான இடைக்கால நிதிக் கூற்றுக்களுக்கு இந் நியமத்தினைப் பிரயோகிப்பதில் நிவாரணம் ஒன்றைக் கோரி கணக்கீட்டு நியமங்கள் குழுமம் பல உரிமங்களிடம் இருந்து கோரிக்கைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகமானது, இந்த நியமத்தின் முதலாவது கட்டமான 2012 இன் முடிவிலிருந்து இது தொடர்பில் ஒழுங்குபடுத்துனர்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வந்துள்ளது.*

### பரிந்துரை

*01 சனவரி 2018 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலப்பகுதிகளுக்கு SLFRS 9 நியமம் பயன்படுத்தப்பட்டிருப்பின் முற்றடக்க வருமானக் கூற்றில் ஏற்பட்டிருக்கத்தக்க தாக்கங்களை வெளிக்காட்டி, LKAS 39 நிதிச் சாதனங்கள்: ஏற்பிசைவும் அளவீடும் நியமத்தைப் பிரயோகித்துத் தொடர்ந்தும் இடைக்கால நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான தெரிவினை வழங்குவதற்கு இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் முடிவெடுத்துள்ளது. அவ்வாறான தாக்கத்தினைத் தீர்மானித்தல் சாத்தியமற்றதாக இருப்பின், அந்த உண்மை வெளிக்காட்டப்படல் வேண்டும்.*

*அதன்படி, 2018 சனவரி 01 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் நிதியாண்டுகளுக்கான இடைக்கால நிதிக் கூற்றுக்களில் ஒப்பீட்டு பெறுமதிகளுக்காக SLFRS 9 நியமத்தின் 7.2.16 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள விலக்குகளைப் பிரயோகிக்க விண்ணப்பிக்க முடிவு செய்யலாம்.*

*எவ்வாறாயினும், 2018 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் தொடங்கும் வருடாந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது SLFRS 9 நியமத்தினைப் பிரயோகிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றது.*

*08-955*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.